DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT JUDGE, ERODE.
**O.S.No.** 494/2021

Deposition of Witness : PW. 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இரத்தினகுமார் | த/பெ. | : | மாணிக்கம் |
| கிராமம் | : | நடுவனேரிப்புதூர் | தாலுகா | : | சங்ககிரி |
| தொழில் | : | ஜவுளி வியாபாரம் | வயது | : | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 the day of 25-02-2026.

குறுக்கு விசாரணை (சாட்சி வழக்கறிஞரால் அடையாளம் காட்டப்பட்டார்)

நான் ஜவுளி உற்பத்தி மற்றும் வியாபாரம் செய்து வருகிறேன். ஜவுளி சம்பந்தப்பட்ட பிராசஸ் யுனிட்டும் செய்து நான் தொழில் செய்து வருகிறேன். நான் வட்டிக்கு கடன் கொடுக்கும் தொழில் செய்து வருகிறேனா என்றால் இல்லை. எனது வசிப்பிடம் மற்றும் தொழில் செய்யும் இடம் எல்லாம் சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், நடுவனேரிபுதூர் என்றால் சரிதான். எனக்கு ஈரோட்டில் சொந்த இடமோ அல்லது வசிப்பிடமோ இல்லை என்றால் சரிதான். எனக்கு ஈரோட்டில் தொழில் செய்யும் இடம் உள்ளது. பிரதிவாதி சாலினி ஜவுளி தொழில் செய்துவரவில்லை என்றால் அவர் ஜவுளி தொழில் செய்துவருகிறாரா என்பது குறித்து எனக்கு தெரியாது. பிரதிவாதி ரியல்எஸ்டேட் மற்றும் கேட்டரிங் தொழில் செய்து வருகிறார் என்பது குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் ஈரோட்டில் உள்ள எனது தம்பி மூலம் தெரியவந்தது. எனது மகனின் திருணமத்திற்கு பிரதிவாதி தான் கேட்டரிங் செய்து கொடுத்தார், அதன் மூலம் பிரதிவாதி எனக்கு அறிமுகம். சுமார் 7 வருடத்திற்கு முன்பு எனது மகனின் திருமணம் நடைபெற்றது. பிரதிவாதி சாலினி எனக்கு உறவினரோ அல்லது நண்பரோ இல்லை என்றால் உறவினர் இல்லை, எனது மகனின் திருணமத்திற்கு முன்பே எனது தம்பின் மூலம் பிரதிவாதி அறிமுகம் மற்றும் பழக்கம். நான் இதுநாள்வரை பிரதிவாதியின் வீட்டிற்கு சென்றதில்லை என்றால் சென்றுள்ளேன். நான் எத்தனை முறை பிரதிவாதியின் வீட்டிற்கு சென்றுள்ளேன் என்றால் நான் 2 முறை பிரதிவாதியின் வீட்டிற்கு சென்றுள்ளேன். நான் SR Tex என்ற பெயரில் நான் ஜவுளி வியாபாரம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். SR Tex மூலம் மூன்றாம் நபர்களுக்கு

V SURESH
Digitally signed by V SURESH
Date: 2026.02.25 18:26:53 +0530

கடன் கொடுத்து அதனை வசூல் செய்துள்ளேனா என்றால் கடன் கொடுத்துள்ளேன். SR Texக்கான வரவு செலவு கணக்குகளை யார் பராமரித்து வருகிறார் என்றால் ஆடிட்டர் பராமரித்து வருகிறார். அந்த ஆடிட்டர் பெயர் என்னவென்றால் ஜெயசீலன். SR Texக்கு தினசரி வரவு செலவு கணக்குகளை பராமரித்து வருகிறோம் என்றால் சரிதான். SR Texல் தினசரி நடக்கும் வியாபாரம் தொடர்பான கணக்கு வழக்குகள் மற்றும் SR Texல் இருந்து 3ம் நபர்களுக்கு கடனாக கொடுக்கும் பணம் ஆகியவைகள் தினசரி வரவு செலவு கணக்கில் பதிவு செய்யப்பட்டுவரும் என்றால் சரிதான். என்னுடன் வியாபாரம் செய்யும் நபர்களுக்கும் மற்றும் என்னிடம் கடன் வாங்கும் நபர்களுக்கும் தனித்தனியாக நான் பேரேடு பராமரித்து வருகிறேன் என்றால் வியாபாரம் செய்யும் நபர்களுக்கு பேரேடு பராமரித்து வருகிறேன், ஆனால் கடன் வாங்கிய நபர்களுக்கு பேரேடு பராமரித்து வருவதில்லை. பிரதிவாதியை பொறுத்து நான் பேரேடு பராமரித்து வருகிறேனா என்றால் பிரதிவாதி என்னிடம் வங்கிமூலமாகவும் பணம் பெற்றுள்ளார், நேரடியாக ரொக்கமாகவும் பணம் பெற்றுள்ளார், வங்கி மூலம் பிரதிவாதி பணம் பெற்றுள்ளதற்கு பேரேட்டில் குறிப்புகள் உள்ளது. பிரதிவாதி ரொக்கமாக பணம் பெற்றதற்கு பேரேடு பராமரித்து வந்தீர்களா என்றால் ரொக்கமாக கொடுக்கும் பணத்திற்கு ஒரு நோட்டில் எழுதி வைப்பேன், வருடம் முடிந்தவுடன் தூக்கி போட்டுவிடுவேன். பிரதிவாதி என்னிடம் ரொக்கமாக கடன் வாங்கியதாக சொல்வதற்கு கணக்கு வழக்குகள் என் கைவசம் உள்ளதா என்றால் தேடிப்பார்த்தால் கிடைக்கும். இந்த வழக்கில் நான் எனது தினசரி பதிவேடு மற்றும் பேரேடை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 ஆவணமானது பிரதிவாதி ரொக்கமாக வாங்கியதாக சொல்லப்படும் கடனுக்கான லெஜ்ஜரோ அல்லது டேபுக்கோ இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் SR Texன் கடன்தாரர்களின் வரவுசெலவு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 ஆவணமானது 01-04-2019 முதல் 31-03-2020 காலகட்டத்திற்கானது என்றால் சரிதான். நான் வருமானவரி கணக்கு தாக்கல் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7 முதல் வா.சா.ஆ.9 வருமானவரி கணக்குகள் பிரதிவாதிக்கு

V SURESH
Digitally signed by V SURESH
Date: 2026.02.25 18:27:11 +0530

கடன் கொடுத்தாக சொல்லப்படும் காலத்திற்கு முந்தைய வருடங்களுக்கான வருமானவரி கணக்குகள் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தின்படி 31-03-2020ம் தேதியில் வியாபார ரீதியிலும், தனிப்பட்ட முறையிலும் கடன்தாரர்கள் எனக்கு கொடுக்கவேண்டிய மொத்த தொகை ரூ.93,36,105.76/- என்றால் அவ்வாறு தான் வா.சா.ஆ.5 ஆவணத்தில் உள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 ஆவணத்தில் பிரதிவாதி எனக்கு எவ்வளவு கொடுக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ரூ.26,70,253.76/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.10 2020-2021 வருவாய் ஆண்டிற்கான வருமானவரி கணக்கில் Trade Debtors என்ற காலத்தில் ரூ.86,36,106/- வரவேண்டியுள்ளது என்று காட்டியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு Trade Debtors என்ற காலத்தில் குறிப்பிட்டுள்ள தொகைக்குள்தான் பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கியதாக சொல்லப்படும் தொகையும் உள்ளடக்கப்பட்டுள்ளது என்றால் இல்லை. பிரதிவாதி என்னிடம் ரொக்கமாக கடனாக பெற்றதாக சொல்லப்படும் தொகை எனது வருமானவரி கணக்கில் காட்டப்படவில்லை என்றால் வருமானவரி கணக்கில் காட்டப்படவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ளபடி பிரதிவாதி ரொக்கமாக எந்த தொகையும் கடனாக பெறவில்லை என்றால் தவறு. வா.சா.ஆ.1 ஆவணத்தை பிரதிவாதி எனக்கு எழுதியே கொடுக்கவில்லை என்றால் தவறு. வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ள வேலுசாமி எனது நிறுவனத்தின் மேலாளர் ஆவார். வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதிய சத்தியசீலா எனது மனைவி. நான், எனது மனைவி மற்றும் எனது மேலாளர் ஆகியோர்கள் ஒன்றுசேர்ந்து கொண்டு வா.சா.ஆ.1 ஆவணத்தை மோசடியாக உருவாக்கியுள்ளோம் என்றால் தவறு. வா.சா.ஆ.1 ஆவணத்தை பிரதிவாதி எனக்கு எழுதிக்கொடுக்கவும் இல்லை, வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையொப்பங்கள் மற்றும் கைரேகைகள் பிரதிவாதி உடையது இல்லை என்றும்

V SURESH Digitally signed by V SURESH Date: 2026.02.25 18:27:25 +0530

சொன்னால் தவறு. பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இனங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

V SURESH

Digitally signed by V SURESH
Date: 2026.02.25 18:27:32 +0530

II Addl. District Judge, Erode.